DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 94/2014

List of Witness : Lw12

Prosecution Witness : PW12

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | சசிகலா | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | ஜெயபால் என்ற சரவணன் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 20/07/2026

(எதிரி ஆஜர் .)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது சிங்கம்புணரியில் குடியிருந்து சிங்கம்புணரியில் பஞ்சு மில்லில் வேலை செய்து வருகிறேன். நான் இதற்கு முன்பு ஜி.வி.ஜி.மில்லில் வேலை செய்து கொண்டு இருந்தேன். கடந்த 12.05.2014 ஆம் தேதி அன்று எங்களை வேலைக்கு அழைத்து செல்வதற்காக மகேந்திரா வேன் ஆன ஜி.வி.ஜி.மில்லுக்கு சொந்தமான நான்கு சக்கர வேன் என்னையும், என்னுடன் வேலை வருபவர்களையும் ஏற்றிக் கொண்டு செம்மடைப்பட்டி அருகே வந்தது. ஜி.வி.ஜி.மில் வேனை ஓட்டிவந்த ஓட்டுநர் செம்மடைப்பட்டி அருகே வேகமாக வந்ததால் வேன் கவிழ்ந்துவிட்டது. விபத்து ஏற்படும் போது நான் வேனுக்குள்ளே தான் இருந்தேன். தற்போது என்னால் சம்பவத்தன்று வேனை ஓட்டிய ஓட்டுநரை அடையாளம் காட்ட முடியாது.சம்பவம் நடந்து 10 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டதால் வேனை ஓட்டிய ஓட்டுநரை எனக்கு ஞாபகம் இல்லை. வேன் கவிழ்ந்ததில் எனக்கு கைகளில் சிராய்ப்பு காயமும், இடது காதில் ஊமைக்காயமும் ஏற்பட்டது. மேற்படி விபத்தில் பார்வதி என்பவர் இறந்துபோனார். காயம்பட்ட என்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். தற்போது மருத்துவமனையின் பெயர் ஞாபகம் இல்லை. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

விபத்து ஏற்பட்டபோது நான் எந்த இருக்கையில் அமர்ந்து இருந்தேன் என்றால் வேனுக்கு மத்தியில் நடுவான இருக்கையில் அமர்ந்துஇருந்தேன். விபத்து நடந்தவுடன் எனக்கு மயக்கம் ஏற்பட்டுவிட்டது என்றால் சரிதான், 5 நிமிடங்கள் மயக்கமாக

இருந்தேன். மயக்கம் தெளிந்தவுடன் தான் விபத்து நடந்த விவரம் எனக்கு தெரியவந்தது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளதைப்போல் வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

PRAVEENA SUBBARAYAN

Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.07.20 18:20:28 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 20/07/2026